[1979 மார்ச் 31

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஸ்ட்ரைக்குகளைக் குறைப்பதற்குரிய ஒரு புது முறையை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பின்பற்றுவதற்காக ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். மேலும் என்னுடைய தொழிலாளர் நலத்துறை மானியம் வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து பேசுவார்களேயானால் அரசினுடைய கருத்தைச் சொல்லி அதன் பிறகு நாம் எல்லோரும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து, ஸ்ட்ரைக்குகளைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கி எக்ஸ்பான்ஷன் அன்ட் மாடர்னைசேஷன் என்பதில் கான்சன்ட்ரேட் செய்வது பற்றி நாம் எல்லோரும் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரலாம்.

பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

*வினா எண் 588—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கியிருக்கும் இல்லக் கட்டிடம் மிக ஆபத்தான நிலையில் உள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) & (ஆ) பழநி நகரில் ஒரு அரிசன பள்ளி மாணவர் விடுதியும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் உள்ளன. இவற்றில் அரிசன கல்லூரி மாணவர் விடுதி தனியார் கட்டிடத்தில் இடம் பெற்றுள்ளது. அது பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அதை விரைந்து பழுது பார்க்க கட்டடத்தின் சொந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மற்ற விடுதிகள் நல்ல நிலையில்தான் உள்ளன.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே பழனி, நகரில் இருக்கக் கூடிய கல்லூரி மாணவர்கள் இல்லங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டடத்தை மராமத்து செய்ய வேண்டும். கட்டடத் சொந்தக்காரரிடம் வலியுறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

எந்தத் தேதியில் வலியுறுத்தப்பட்டது? மராமத்து செய்யப்படாமல் அங்கே பாம்புகளும், பெருச்சாளிகளும் அந்த விடுதியில் தங்கி இருக்கின்றன. அந்தப் பயத்தினால் உள்ளே படுப்பதற்குப் பதிலாக வெளியே படுக்கிறார்கள். ஆகவே, அதை எப்போது மராமத்து செய்வதற்கு உத்தரவிடப்படும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எந்தத் தேதி என்கிற விவரம் இல்லை. ஒரு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு மாவட்ட நல அதிகாரி அந்த இடத்தைப் பார்வையிட்டு அந்தக் கட்டடச் சொந்தக்காரர் உடனடியாக அந்தக் கட்டடத்தைப் பழுது பார்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக அங்கு மேஜை, நாற்காலி, லைட் போன்ற வசதிகள் கிடையாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வசதியையும் படிப்படியாக செய்து கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இங்கே போட்ட கேள்வியின் மூலமாகவும், அதற்கு அளித்த பதில்கள் மூலமாகவும் அந்தக் கட்டடம் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், அதனால் அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்க்க வேண்டும் என்பதற்காக அங்குள்ள அதிகாரி அந்தக் கட்டடத்தை பார்வையிடச் சென்றிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. பிறகு அவர்கள் நோட்டீஸ் கொடுத்து செய்யவேண்டியிருக்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படக்கூடிய ஒரு பிரச்னை இருக்கிறது. அந்த முறையில் காலம் தாழ்த்தாமல் அரசாங்கமே அந்தச் செலவை ஏற்று மராமத்து செய்யலாம். ஆகவே, ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டடத்தைப் பழுது பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆபத்து ஏற்படுகிற அளவுக்கு அந்தக் கட்டடத்திற்கு பழுது ஏற்படவில்லை. சிறுசிறு பழுதுதான் ஏற்பட்டிருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.